# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

**Vol - 17** | **November நவம்பர்** | **2016**

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம் | 3 |
| தொழுகை : ஜெபம் | 7 |
| வாலிபர் பகுதி | 10 |
| சங்கீதம் : யூதர்களின் பாடல்... | 12 |
| சிறுவர் பகுதி | 15 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.










## Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

### கிருபையுள்ள வார்த்தை

நம் வாழ்வை பரிசுத்தப்படுத்தும் பரிசுத்தரின் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.90**

ஆசிரியர் உரை

# கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்



P.C. பிலேமோன் ராஜா

ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களால், "சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் ! பரிசுத்தர் !" என போற்றப்படுகிற, பரலோக தேவனுடைய பரிசுத்த நாமத்தினாலே உங்களை வாழ்த்தி, இவ்விதழ் வழியாக சந்திப்பதில் அகமகிழ்கிறேன்.

அன்பானவர்களே ! பரலோக தேவன் சிநேகிக்கிற பரிசுத்தத்தைப் பற்றி நாம் தியானம் செய்வோம். **மல்2:11** "யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்."

## 1. நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்

**லேவி 20:8** "என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்." Jehovah M'kaddesh என்ற வார்த்தையின் பொருள், 'தேவன் நம்மை பரிசுத்தமாக்குகிறார்' என்பதாகும். ஏனெனில் நம்மால் நம்மை பரிசுத்தமாக்க முடியாது. **எரே 10:23** "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்". மற்றும், நம்முடைய வழிகள் அனைத்தும் மரணத்துக்கேதுவானவை. **நீதி. 14:12** "மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்."

ஆனால், தேவனுடைய வழி என்பது பரிசுத்தமானது. **ஏசாயா 35:8** "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை." மற்றும், அது ஜீவனுக்கானது. **மத் 7:14** "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்''. மேலும் அது உயர்வானது **ஏசா 55:8,9** "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகம் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகம், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது". குறிப்பாக சொன்னால் அந்த வழி ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே **யோவா 14 :6** "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

பரலோக தேவன், நாம் அவருடைய சொந்த ஜனங்களாகவும் பிள்ளைகளாகவும் இருக்கிறபடியால், அவரைப் போலவே நாமும் இருக்க நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். எப்படி தேவன் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார்?

### அ. ஆண்டவர் இயேசுவின் இரத்ததினால்

யோவான் ஸ்நானகன் இயேசுவை, 'உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுகுட்டி' **(யோவா 1:29)** என்று தன்னுடைய வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு அறிவித்தார். அப்போஸ்தலனாகிய யோவான், இயேசு கிறிஸ்துவை சர்வலோகத்தின் பாவங்ளையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் **(1 யோவா 2:2)** என்று கூறினார்.



பேதுருவோ, நாம் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம். **(1 பேதுரு 1:18,19)** என்று கூறுகிறார். **எபி 13:2** "அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்". ஆகையால் மனிதர்களாகிய நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

### ஆ. தண்ணீர் முழுக்கினால்

எபே 5:26,27 "தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்''.



திருமுழுக்குப் பெறும்போது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால், தேவனாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம். ஆகையால் தான் அனனியா, சவுல் என்ற பவுலை தாமதிக்காமல் திருமுழுக்கு பெறும்படி அவசரப்படுத்தினார் மற்றும் அறிவுறுத்தினார். அப் 22 :16 "இப்பொழுது நீ தாமதிக்கிறெதன்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்''. இதன் அவசியத்தை, அவசரத்தை உணர்ந்த சிறைச்சாலை அதிகாரி நடுராத்திரியிலே தன் வீட்டாரனைவரோடும் ஞானஸ்நானம் பெற்றார் (அப்16:25,32,33). நாம் கிறிஸ்துவின் திருவசனத்தின்படி திருமுழுக்குப்பெறும்போது, தேவன் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார்.

### இ. கர்த்தரின் திருவிருந்தினால்

மீட்கப்படாத ஒருவருக்கு கிறிஸ்துவின் இரத்தம் திருமுழுக்கினாலே பரிசுத்தஞ்செய்யவது போல, மீட்கப்பட்டவருக்குள் பாவம் வந்தால், அவர்களை பரிசுத்தப்படுததப்படுத்த தேவன் கொடுத்த மிகப்பெரிய ஈவு திருவிருந்தாகும். 1 கொரி 10:16,17. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்". இதனை வாரத்தின் முதல்நாளிலே முதலாம் நூற்றாண்டு பரிசுத்தவான்கள் செய்தனர் (அப்2, அப் 20:7). சிலர், எந்த வாரத்தன் முதல் நாள்? என கேட்கின்றனர். ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக (யாத் 20:8) என தேவன் சொன்னப்போது, இஸ்ரவேலர்கள், எந்த ஓய்வு நாள் என கேட்கவில்லை. ஏனெனில் ஒவ்வொரு ஓய்வு நாளும் அதை செய்ய வேண்டும் என அவர்கள் அறிந்திருந்தனர். மற்றும், அதன் பொருளும் அதுதான். சிலர் நாம் பரிசுத்தமில்லாமல் எப்படி வாரந்தோறும் பங்குபெறுவது என்கின்றனர். மத் 26:27,28 "பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது".

### ஈ. சத்தியத்தினாலே

யோவான் 17:17 "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்". என்று ஆண்டவர் இயேசு ஜெபம் செய்தார். மேலும் யோவான் 8:32ல் "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்''. மற்றும், ஆண்டவர் இயேசு, அந்த சத்தியம் 'நானே' (யோ14:6) என்றார். பரலோக தேவன் தன்னுடைய சத்தியமாகிய வசனத்தினாலே (வார்த்தையினாலே) நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். தேவன் தமது சத்தியத்தினால் நம்மை எவ்வாறு பரிசுத்தப்படுத்துகிறார்?




இதற்கு அப் 2ம் அதிகாரம் ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். பேதுரு பேசின கர்த்தருடைய வசனத்தை கேட்ட மக்கள், தேவன் தங்களுடைய பாவங்களிலிருந்து தங்களை விடுவித்து பரிசுத்தப்படுத்தும்படி, அவருடைய சத்தியத்திற்கு தங்களை ஒப்புகொடுத்து கீழ்படிந்தனர் (அப்2:37–41). நாம் வசனத்தை கேட்கிற ஒவ்வொரு முறையும், தேவன் நம்மை பரிசுத்தப்படுத்த விழைகிறார். ஆகையால் நாம் நம்முடைய மனதை கடினப்படுத்தாமல் (எபி3:7,8), திறந்த மனனதுடனே வசனத்தைக் கேட்க வேண்டும். இதன் ஆழமான அவசியத்தை உணர்ந்த எபிரேய ஆசிரியர், சத்தியத்தை கேட்கின்ற வாய்ப்புகளை தவறவிட்டு விட வேண்டாம் என அறைகூவல் விடுக்கின்றார் (எபி 10:24,25). ஆகையால் நம்மை தேவன் பரிசுத்தம் செய்யும்படி சத்தியத்தை கற்றுக்கொள்ள கொடுக்கின்ற வாய்ப்புகளை தவறவிட்டுவிடாமல் இருப்போம்.

## உ. ஜெபத்தினால்

ஞானஸ்நானம் பெற்ற மீட்கப்பட்ட **(மாற் 16:15)** ஒருவர், பாவம் செய்து தனது பரிசுத்தத்தை இழக்கும்போது, அந்த நபர் மனந்திரும்பி தனது பாவத்தை அறிக்கையிட்டு ஜெபிக்கும் போது, பரலோக தேவன் தமது மிகுந்த இரக்கத்தினாலே அவரது பாவத்தை மன்னித்து, அவரை சுத்திகரிக்கிறார். **1 யோவான் 1:9** ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". **(அப் 8.13).** திருமுழுக்கு பெற்று, மீண்டும் பாவத்தின் வஞ்சனையினால் பிடிக்கப்பட்டு, பாவம் செய்த சீமோனை நோக்கி பேதுரு, **அப் 8:22ல்** "ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒரு வேலை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்". என்று கூறினார். இது சீமோனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அருமையான வாய்ப்பாக இருந்தது. தானியேல், தன்னுடைய ஜனங்களின் பாவத்தினை தேவன் மன்னித்து இரக்கம் செய்யும்படி ஜெபித்தார் **(தானி 9).** தாவீது தனது பாவத்தை மன்னித்து தேவன் தன்னை பரிசுத்தப்படுத்தும்படி ஜெபித்தார் **(சங் 51),** என்பதை நினைவில் கொள்வோம்.



## 2. உங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்

யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி : உங்களை பரிசுத்தப் பண்ணிக்கொள்ளுங்கள் **(யோசுவா 3:5)** என்று கூறினார். நம்மால், நம்மை பரிசுத்தப்படுத்தமுடியதே பிறகு ஏன் யோசுவா இவ்வாறாக கூறினார்? இதன் பொருள் என்னவெனில், தேவன் உங்களுக்கு கொடுத்த பரிசுத்தத்தை பேணி காத்துக்கொள்ளுங்கள் என்பதே. நம்மால் நம்மை பரிசுத்தமாக்கிக் கொள்ள முடியாது என்பது உண்மை. ஆயினும் தேவன் நம்மை பரிசுத்தமாக்கிய நிலையிலே பத்திரமாக நம்மை நாமே வைத்துக் கொள்ளவும் முடியும். அதை எப்படி செய்வது?

## அ. பாவத்திற்கு விலகி ஓடுங்கள்

பவுல் தீமோத்தேயுவை, விசுவாசத்தை விட்டு விலக செய்யும் அசுசியான காரியங்களை விட்டு விலகி ஓட சொல்கிறார். **1 தீமோ 6:10,11** "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு". யோவான் பாவத்தினை விட்டு ஓய்வு கொடுங்கள் என்கிறார். **1 யோவான் 4:2** "தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது." மேலும் அவைகளுக்கு விலகி உங்களை காத்துக் கொள்ளுங்கள் என்கிறார். **1 யோவா 5:21** "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களை காத்துக்கொள்வீர்களாக. ஆமென்" என்கிறது. ஏனெனில் பாவம் நம்மைவிட்டு விலகி செல்லாது; நாம் தான் பாவத்தைவிட்டு விலகி ஓட வேண்டும். யோசேப்பு பாவத்தை விட்டு விலகி ஓடினார் **(ஆதி 39)** என்பது நாம் அங்கேயே அறிந்ததே. பாவம் நம்மை வஞ்சிக்க நாம் இடங்கொடாதிருப்போம். அது நம்மை நெருங்கும் போது, நாம் நிற்பது கூட பாவத்தை செய்வதற்கான அறிகுறியாகிவிடும். ஆகையால் தான் யோசேப்பு நிற்காமல் ஓடினார்.

## ஆ. அந்நிய நுகத்திற்கு உட்படாதிருங்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய நுகத்தினால் தங்கள் பரிசுத்தத்தை இழந்தனர். **மல் 2:11.** "யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தையூ தாஜ னங்கள்ப ரிசுத்தக்கு லைச்சலாக்கிஅ ந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்". அந்நிய நுகம் என்பது தேவனுடைய பரிசுத்தத்தை, பரிசுத்த குலைச்சாலக்குகிறது. தேவனுடைய பிள்ளையே அந்நிய நுகம் உன்னை கவர்ந்திழுக்காதபடி பார். ஏனெனில் உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் **(யோ 2 : 15-17).** தேவனுடைய பிள்ளைகள் அந்நிய நுகத்தோடு கலப்பதை (பரிசுத்தத்தை இழப்பதை) தேவன் எவ்வளவேனும் அனுமதிக்கவில்லை. **2கொரி6:14-18** "அந்நிய நுகத்தியே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது?

நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று 'சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்".

## இ. கள்ள போதனைகளுக்கு காது கொடாதிருங்கள்.

பெர்கமு சபையின் மிகப்பெரிய பாவமாக கர்த்தர் கண்டது. அவர்கள் கள்ள போதனைகக்கு செவி சாய்த்ததே **வெளி 2:14,15** ''ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த, பிலேயாமுடைய போகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்". மேலும் அந்த பாவத்திலிருந்து மனந்திரும்படி அவர்களை தேவன் எச்சரித்தால் **வெளி 2 :16** "நீ மனந்திரும்பு இல்லாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்". அது தேவனை நமக்கு எதிராக யுத்தம் செய்ய வைக்குமளவு, நமது பரிசுத்தத்தை இழக்க செய்து விடும். அது எப்படி? தேவனுடைய வார்த்தை (சத்தியம்) நம்மை பரிசுத்தப்படுத்துவது எவ்வளவு உண்மையோ, உண்மை அவ்வளவு கள்ள போதனைகள் நம்மை பரிசுத்தமிழக்க செய்து விடும். அந்த கொடிய காலம் இப்பொழுது இருக்கிறது **(1தீமோ 4:3,4).** நாம் அவைகளுக்கு விலகியிருக்க, எது சத்தியம் என்பதை அறிய வேண்டும். ரொம்ப எளிது, ஆண்டவர் இயேசு கட்டளையிட்டு, பரிசுத்த அப்போஸ்தலர்கள் போதித்து, முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கைக்கொண்டவைகள் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை மட்டும் நாம் செய்யும் போது, நம் பரிசுத்தத்தை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## ஈ. உலகத்தோடு ஒத்த வேஷமிடாதிருங்கள்

இந்த உலகம் பொல்லங்கனுக்குள் இருக்கிறது. **(1 யோவான் 5:19):** ஆகையால் இந்த உலகம் எப்பொழுதும் தேவ சித்தத்திற்கு எதிராகவே செயல்டுவதாக இருக்கிறது. இந்த உலகம் தான் செய்வதை, தேவனுக்காக செய்வதாக கூட கூறிக்கொள்ளும். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் சொன்னது போல **(1 சாமு 15:15),** ஆகினும் அது தேவனுக்கு பொல்லாப்பாக இருந்தது **(1 சாமு 15:19)** என்பதை நினைவில் கொள்வோம். இந்த உலகம் கிறிஸ்துவிற்கு எதிரானதாக இருந்தது, இருக்கிறது, மேலும் இருக்கும். ஆகையால் தான் கிறிஸ்து இவ்வாறாக ஜெபித்தார்; **யோவான் 17:16** "நான் உலகத்தானனல்லாதுபோல, அவர்களும் உலகத்தாரல்ல". பவுல் ரோமருக்கு எழுதும் போது **ரோமர் 12:2ல்** "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள்ம நம்பு திதாகிறதினாலேம றுரூபமாகுங்கள்." மீண்டும் அதனை ஞாபகப்படுத்துகிறார். உலகத்தின் கவர்ச்சிக்கு இழுக்கப்பட்டு போகாதபடிக்கு, அதற்க விலகியிருப்போம். எல்லாவற்றையும் தேவனுக்காக செய்கிறோம் என்பதைவிட தேவன் சொன்னபடியே செய்கிறோமா என்பதே முக்கியமானது.

## இறுதியாக...

பிரியமானவர்களே! பரலோக தேவன் நம்மை பரிசுத்தமுள்ளவர்களாக வாழ விரும்புகிறார் **1 தெச 4:3** "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து," நம்மை அழைத்ததும் அதற்காகத்தான், **1 தெச 4:7** "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.'' மேலும், அவரைப் போலவே பரிசுத்தமாயிருக்கும்படி நம்மை அழைக்கிறார், **1 பேதுரு 1:15,16** ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே." ஆகையால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவன் சிநேகிக்கிற பரிசுத்தத்தை நாமும் சிநேகித்து, தேவன் விரும்புகிறபடி, தேவனுக்கேற்ற பரிசுத்தத்தோடு வாழ்வோம் **(லேவி 20:26).**

**– அன்புடன், ஆசிரியர்**

# பாடம் : 3 ஜெபம்

Jerry Bates



ஜெபம் என்பது ஒரு அறுதி பேரமல்ல. அறுதியிட்ட பேரத்தில் தேவனிடம் நாம் ஜெபிக்கும்போது, "நீர் என்னை ஆசீர்வதித்தால், நான் உமக்குச் சேவை செய்யத் துவங்குவேன்'' என்று பேரம் பேச முற்படுவதாகும். நாம் செய்யும் சேவையெல்லாம் ஏற்கனவே தேவன் நமக்குச் செய்திருப்பவைகளுக்கு அடிப்படையாகும். நமது ஊழியக் காரியங்களில், வெறுமையான வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அவைகளை நிறைவேற்றாமலேயே கர்த்தர் மேலும் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென வற்புறுத்த இயலாது. அல்லது ஜெபமானது, அவசர நேரங்களில் பயன்படும் ஒரு கருவியாகவும் பார்க்கக்கூடாது. எப்படியிருப்பினும், உபத்திரவங்கள் கடந்து போகும் போது, அவர்கள் தேவனை மறந்து தங்களுடைய முந்தின வாழ்க்கைக்கே திரும்புகின்றனர்.

## யார் ஜெபிக்க வேண்டும்?

அநேகர் இக்கேள்விக்கு அவசரமாக, ஒவ்வொருவரும் ஜெபிக்க வேண்டும் என்று பதில் சொல்லிவிடுவார்கள்.



ஜெபிக்கிற எந்த ஒருவரையும் நான் உற்சாகமிழக்கச் செய்ய மாட்டேன் என்பது நிச்சயமானதாக இருந்தபோதிலும், ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு அறுதியிட்ட ஆசீர்வாதமாக உணரப்படவேண்டும். தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தைச் சாராதவர்களின் ஜெபத்தை தேவன் கவனிப்பார் என்பதற்கான வாக்குறுதி எதுவுமில்லை. ''துன்மார்க்கருக்கு கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களுடைய ஜெபத்தையோ கேட்கிறார்'' **(நீதிமொழிகள் 15:29). 1 பேதுரு 3:12** ல், பேதுரு, சங்கீதம் 34லிருந்து மேற்கோள் காட்டி, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" என்கிறார். வேறு சில வசனங்களும் இத்துடன் சேர்க்கப்படலாம்; ஆனாலும், ஜெபத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து வசனங்களும், தேவனுடைய மக்களுக்கு அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே எழுதப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதற்கு மேலும், நீதியுள்ள வாழ்க்கையை வாழுகிற கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே ஜெபத்திற்கான சிலாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. **1 யோவான் 3:22**ல், "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால், நாம் வேண்டிக்கொள்ளுகிற தெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்," என்று சொல்லப்படுகிறது.

தேவனுடைய கற்பனைகளை கைகொள்ளுகிறவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதில் கொடுப்பார் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டுள்ளது என்று யோவான் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்: இதன்மூலம், கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழாதவர்கள், இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை அனுபவிக்க இயலாது என்பது புலனாகிறது.

கிறிஸ்தவர்கள், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர். ''நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." **(யாக்கோபு 5:16).** இந்த வார்த்தைகள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டவை. இதில் நீதிமான்கள் செய்யும் ஜெபம் மிகவும் பெலனுள்ளவை என்றும், ஒரு பிரசங்கியாரோ, பாதிரியாரோ ஜெபிக்கிறதினாலே மட்டும் அல்ல என்றும் நமக்குச் சொல்லப்படுகிறது. அதே வேளையில் ஒரு பிரசங்கியாருடைய ஜெபம் அல்லது ஒரு பாதிரியாரின் ஜெபம், மற்ற எந்த ஒருவருடைய ஜெபத்தையும்விட பெலனுள்ளது என்று எங்கும் சொல்லப்படவில்லை. ஜெபம், கீழ்படிதலுக்குப் பதிலாக செய்யப்பட வேண்டிய ஒன்றல்ல. உண்மையில் சில வேளைகளில் தேவன்

ஒரு சிலரை ஜெபிக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். **(உதாரணம், யாத்திராகமம் 14:15; அப். 22:16)**

**1 தீமோத்தேயு 2:8**ல் பவுல், "அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்." என்று எழுதினார். கிரேக்க பதத்தில், புருஷர்கள் என்பது ஆண்களை மட்டும் குறிக்கிறது. ஸ்திரீகளுக்கும் அல்லது மனுஷர்களைக் குறிக்கும் பொதுவான வார்த்தைக்கும் வேறே பதங்கள் குறிப்பிடப்படுகின்றன. இப்படி, பொதுவான ஜெபத்தைச் செய்ய ஆண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. கைகளை உயர்த்தி ஜெபிப்பது குறித்து ஜனங்கள் அடிக்கடி கேள்விகள் கேட்பதுண்டு. கைகளை உயர்த்தி ஜெபிப்பதில் தவறுகள் ஏதும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக இது கட்டளையிடப்பட்ட காரியமல்ல. ஜனங்கள் வித்தியாசப்பட்ட கோணங்களில் ஜெபித்ததாக வசனம் குறிப்பிடுகிறது. ஆனால் பெரும்பாலும் முழங்கால் படியிட்டு அல்லது நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து பணிந்துகொண்டதாகவெல்லாம் சொல்லப்படுகிறது. ஆகிலும் நம்முடைய ஜெபங்களில் சரீரக்கோணம் முக்கியமானதல்ல; மாறாக, பவுல் நமது வாழ்வில் இருக்க வேண்டிய பரிசுத்தத்தையே வலியுறுத்துகிறார். ஜெபிக்கிற மனுஷர்கள் பரிசுத்தமுள்ளவர்களும், கீழ்படிதலுள்ள வாழ்க்கையை வாழுகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

## எவைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டும்?

நமது ஜெபங்களில் அநேகக் காரியங்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மிகமுக்கியமாக, நாம் தேவனுக்கு ஸ்தோத்திரங்களைச் சொல்லுகிறோம். தேவன், தேவன் மட்டுமே ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர். இத்துடன் தொடர்புபடுத்தி, அவரிடமிருந்து நாம் பெற்ற ஆசீர்வாதங்களுக்காக நம்முடைய நன்றியறிதலும் சேர்க்கப்பட வேண்டும். அவர் கொடுத்த பொருளாதார ரீதியான மற்றும் விசேஷமாக ஆவிக்குரிய ரீதியான ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" **(பிலிப்பியர் 4:6–7).** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரதுடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" **(கொலோசெயர் 4:2).** பவுலும் தம்முடைய ஜெபத்தில், தன்தேவைக்காக ஜெபிப்பதைக் கவனியுங்கள். தனிப்பட்ட தேவைக்கான ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்பது சுய நலமோ பாவமோ அல்ல. வழிநடத்துதலுக்கும் ஞானத்துக்காகவும் கேட்டு ஜெபிப்பது நமக்கு அவசியம் **(யாக்கோபு 1:5).** நாம் ஏழைகளுக்காகவும், வியாதிப்பட்டவர்கள், ராஜாக்கள், பிற கிறிஸ்தவர்கள், போன்ற மற்றவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் **(யாக்கோபு 5:16).** ஒரு விசேஷித்த முக்கிய பகுதியாக நமது ஜெபத்தில் காணுவது, அறிக்கையிடுதல்: நமது விசுவாசத்தையும் நமது பாவங்களையும் அறிக்கையிடுதல் வேண்டும். **1 யோவான் 1:8,** ஒருவருக்கொருவர் நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்மை மன்னிப்பதற்கு தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லுகிறது. அறிக்கையிடுதலுடன் இணைந்து வருவது மனந்திரும்புதலும் பாவமன்னிப்பைக்கோருவதுமாகும். இதற்கு தேவன் உண்மையுள்ளவரும், சார்ந்திருக்க ஏதுவானவரும் அல்லது பாத்திரராயுமிருக்கிறார். நம்மை மன்னிப்பதாக தேவன் வாக்களித்துள்ளார். தாம் வாக்களித்ததை தேவன் செயல்படுத்துவார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகிலும், நாம் மற்றவர்களை மன்னியாதிருந்தால், தேவனும் நம்மை மன்னிக்கமாட்டார் **(மாற்கு 11:26)**

## நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் ?

நமது ஜெபத்தின் மிக முக்கியமான பகுதி நமது எண்ணங்களே! நமது ஜெபங்கள் தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள பலமான விசுவாசமும் ஒரு நேர்மையான இருதயமுமாகும். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அ வர்கள் இருதயமோ எனக்குத்தூரமாய் விலகியிருக்கிறது". **(மத்தேயு**



**15:8).** நேர்மையான இருதயத்துடன் சம்பந்தப்பட்டிருப்பது தாழ்மை, மற்றும் சரியான உள் எண்ணத்துடன் ஜெபிப்பது. நீண்ட ஜெபங்களைச் செய்யவேண்டும் என்று அவசியமில்லை. **மத்தேயு 6:5–8**ல், அஞ்ஞானிகள் தங்கள் ஜெபங்களில் அலப்புகிறார்கள் என்று கூறுகிறது. சொன்னவைகளையே மறுபடியும் மறுபடியும் பேசுவதால் நமது ஜெபம் பெலனுள்ளதாயிருக்காது.



பெரிய விசுவாசிகளின் ஜெபங்களெல்லாம் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்த்தால், மிக சுருக்கமான ஜெபங்களையே செய்துள்ளனர். நாம் தேவனிடத்தில் பயபக்தியுடன் ஜெபிக்க வேண்டும். தேவன், தேவனே! 'நாம் மனுஷர்கள்', என்ற எண்ணம் எப்பொழுதும் நமக்குள் இருக்க வேண்டும். "தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு. தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியாலிருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" **(பிரசங்கி 5:2).**

இயேசுவை நாம் மத்தியஸ்தராய்க் கொண்டு தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே! எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷ குமாரன் அவரே ....." **(1 தீமோத்தேயு 2:5,6).** இரண்டு கூட்ட மக்களுக்கிடையே (சாமாதானம்) பேசுபவர் மத்தியஸ்தர்; இந்த விஷயத்தில், தேவனுக்கும் மனுஷருக்குமிடையேயான மத்தியஸ்தர் அவர். ஒரு நல்ல மத்தியஸ்தன், இரண்டு கூட்ட மக்களின் சூழ்நிலைகளையும் நன்கு அறிந்திருப்பார்; இப்படியாக, ஒருவருக்கு இயேசுவைக் காட்டிலும் சிறப்பான மத்தியஸ்தன் இருக்க முடியாது. அவர் தேவனை அறிந்திருந்தார்; ஏனெனில், அவரே தேவனாயிருந்தார்; அவர் மனுஷனையும் அறிவார். ஏனெனில், அவர் மனுஷனைப் போலவே மாம்சத்தில் வந்தார் **(பிலிப்பியர் 2:5–11).** பவுலும் கூட உறுதிப்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபத்தை தேவனிடத்தில் ஒப்புவிக்கக் கூடியவராய் இருக்கிறார் என்று சொன்னார். "அந்தப்படி ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர், தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" **(ரோமர் 8:26,27).** வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு என்பது தேவனுக்கு மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய ஒரு பாஷையல்ல; மாறாக, அவை மனுஷனுடைய பெருமூச்சல்ல, ஆவியானவரின் துக்கத்தின் பெருமூச்சு, ஆவியானவர் செய்கிற எல்லாவற்றையும் நாம் அறிந்து கொள்ள இயலாவிட்டாலும், ஆவியானவரும் கிறிஸ்துவும் நமது விண்ணப்பங்களைக் கொண்டுபோய் அவைகளை தேவனுக்கு முன்பாக அவருடைய சித்தத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். இது நமக்கு ஒரு பெரிய உற்சாம் அளிக்கும் காரியமாக இருக்கக் கூடும்.

ஜெபம் என்பது, மேலும் நமது ஜெபம் கேட்கப்பட நாம் என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்வது. எதையும் செய்யாமலேயே மற்றவர்களுக்கு நம்முடைய ஜெபம் உதவிகரமாயிருப்பது அவ்வளவு எளிதல்ல. **யாக்கோபு 2:15–16**ல், யாக்கோபு இப்படிப்பட்ட எண்ணத்திற்கு எதிராக எச்சரித்திருக்கிறார்; " ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளைக் கொடாவிட்டால், பிரயோஜனமென்ன?" **(யாக்கோபு 2:16–17).** இன்னொரு வார்த்தையில் சொன்னால், யாரோ ஒருவருக்காக வெறுமனே ஜெபிப்பது எவ்வித நம்மையையும் பயக்கப்போவதில்லை; தேவையுடையோருக்கு நாம் கொடுக்க வேண்டும். தேவன் தமது ஊழியக்காரர்கள் மூலமாக, ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார்; ஆகையால், நாம் உண்மையாக எதுவும் செய்யாமல் நமது கடமையைச் செய்துவிட்டோம் என்ற நினைவில் யாருக்கும் ஜெபிப்பது அவ்வளவு எளிதல்ல.

வாலிபர் பகுதி :

# பாவத்தைக் கண்டுபிடித்தலும், துறத்தலும்...

❖ பாவமுள்ள நடத்தை என்பது, அடிப்படை தேவைகளைத் தவறான முறையில் தீர்த்துக்கொள்ள செய்யும் முயற்சி ஆகும்.

❖ கிறிஸ்துவுக்குள் நாம் வாழும்போது, நமது தேவைகளை முற்றிலுமாக சந்திக்க வாக்களித்துள்ள தேவனை மறந்து, நம் மனம்போல் வாழ்வதே பாவத்தின் சாராம்சம்.




❖ சரீர வாழ்வு என்பது, உலகத்தில் உடல் முடிவெடுத்து, ஆவி ஆத்துமாவை இயக்குகிறது.

❖ அவிக்குரிய வாழ்வ என்பது, 'தேவனுடைய வசனத்தின்படி' ஆவியிலும் ஆத்துமாவிலும் முடிவெடுத்து உடலை இயக்குகிறது.

❖ 'சாத்தான் மீது முழு அதிகாரம் எனக்கு உண்டு' என்று அறிவதே ஆவிக்குரிய வாழ்வு.

❖ பாவத்துறப்பு என்பது, ஆவிக்குரிய செயல்களில், வாழ்வில் ஆத்துமாவை வசனத்தினால் நிரப்பிக்கொண்டே இருப்பதும், அந்த வசனத்தின்படி ஒவ்வொரு செயலிலும் நம் உடலை, சிந்தனையை, உணர்வை, கட்டுப்படுத்த பழக்கிக்கொண்டே இருப்பதும் ஆகும்.




❖ மனிதனுடைய அசைவுகளை, செயல்களை அடக்கியாள மூளை அவசியம். காரியங்களை பகுத்தறிய, சரியான மதிப்பீடு செய்ய, நிதானித்து அறிய, கண்ணுக்கு புலனாகாத சிந்தை அவசியம்.

அந்த சிந்தையை வசனத்தைக் கொண்டு ஆள, அதை வழி நடத்த, வசனங்களை எல்லாவிஷயத்திலும் அடிக்கடி படித்து கிறிஸ்துவின் போதனையினால் நிரப்பினால், நம் சிந்தையானது ஆவிக்குரிய சிந்தையாக, ஆத்மீக சிந்தையாக, கிறிஸ்துவின் சிந்தையாக நிரம்பும், மாறும்!

இந்த சிந்தை உங்கள் மூளையை (அறிவு) செயல்படுத்தி, உங்களுடைய அசைவுகளை, செயல்களை வசனத்தின்படி அடக்கியாள ஏதுவுண்டு.

பொதுவாக சொல்லுவார்கள், எதை எங்கு தொலைத்தோமோ, அதை அங்கிருந்தே தேடி, சரிசெய்து ஆரம்பிக்க வேண்டும்.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. தானியேல் தன்னை கறைபடாதபடி எப்படி காத்துக் கொண்டார்?
2. தேவனுக்கு பிடிக்காதவைகள் என உனக்கு தெரிந்த ஏதேனும் நான்கினை எழுது?
3. தேவனுக்கு பிடித்தவைகள் ஏதேனும் நான்கினை எழுது?
4. யோபுவை தேவன் ஏன் ஆசீர்வதித்தார்?
5. திமிர்வாதக்காரனிடம் ஆண்டவர் இயேசு என்ன சொன்னார்?
6. பாவம் செய்த மனிதன் என்ன செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2016**

**ஆதி 1:28,29** “பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்னர் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது;’’




தேவனிடமிருந்து நம்மை பிரித்தது பாவமே! எனவே அங்கிருந்தே சீர்செய்து நம் வாழ்வை துவங்குவோம். ஆளும் தன்மையுடன் தேவன் மனிதனை படைத்தார். பாவம் கீழ்படியாமை என்ற உருவத்தில் உள்ளே நுழைந்தது. சுயமாய் சிந்திக்க கொடுத்த அறிவை, ஆவியிலிருந்து தொடங்காமல் மாம்சத்திலிருந்து துவங்கியதே கிழ்ப்படியாமை. இதற்கு எதிராக நாம், தேவ திட்டம், சித்தத்திற்கு நம்பி கீழ்ப்படிவதே, இழந்த ஆளுமையை மனிதன் மீண்டும் பெற வழியாகும். அதை இயேசுவின் இரத்தம் (விசுவாசம், மனந்திரும்புதல், பாவமன்னிப்பு) சாத்தியப்படுத்துகிறது. எனவே மாம்ச சிந்தை இடத்தில், ஆவியின் சிந்தை நம்மை ஆள, நம் ஒவ்வொரு செயலையும் வசனத்தின்படி வழிநடத்த, சபையாகவோ தனியாகவோ வேதத்தை ஆராய்சி செய்து பழகுவோம்.

அ) மாம்ச சிந்தை – அழிவு

ஆ) ஆவியின் சிந்தை – வாழ்வு

எனவே வாழ்வாங்கு வாழவும், பாவமென்றால் என்ன என்ற அறிவை பெறவும், அதை விட்டுவிடவும், எதிர்திசையில் ஆவிக்குரிய வாழ்வு வாழ்ந்து சுகித்திருக்கவும், பாவத்தை பூரணமாக வெறுப்போம் மற்றும் தடுப்போம். தேவனிடமிருந்து பரிபூரண வாழ்வு பெறுவோம்.

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV : Every Friday 6.00 - 6.30 a.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தொடர் 16 சங்கீதம்: யூதர்களின் பாடல் புத்தம்

வாசிக்க வேண்டிய சங்கீதம் : **1, 2, 8, 14, 15, 19, 22, 23, 32, 37, 42, 46, 51, 73, 90, 100, 110, 121, 122, 127, 136, 137, 139, 148.**

## தலைப்பு

சங்கீதம் என்பதற்கான எபிரெயப் பெயர், "துதிகளின் புத்தகம்'' என்று அர்த்தப்படுகிறது. நமது தலைப்பானது, அடிப்படையில் "பாடல்கள்" என்று அர்த்தப்படுகிற '*psalmos*' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது.

## பின்னனி :

சங்கீதங்களின் புத்தகம் இஸ்ரவேல் மக்களின் ஜெபப்புத்தகமாகவும், பாடல் நூலாகவும் இருந்தது. இது தனிப்பட்ட மற்றும் பொதுவான ஆராதனையில் பயன்படுத்தப்பட்டது. தொடக்கக்கால சபையார் தங்களின் ஆராதனையில், சங்கீதங்களில் சிலவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம் **(எபேசியர் 5:19).** நாம் இன்னமும் சங்கீதங்கள் 19, 23, 100 மற்றும் பிறவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட பாடல்களைப் பாடுகிறோம்.

சங்கீதங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருப்பினும், அவைகள் காலம் கடந்தவைகளாக நிலைத்துள்ளன. அவைகள் பெருவருத்தத்தின் ஆழங்களைப் பற்றியும் மகிழ்ச்சியின் உயரங்களைப் பற்றியும் கூறுகின்றன. அவைகள் எப்போதுமே, அவற்றை எழுதியவர் தேவனுடன் கொண்டுள்ள உறவு பற்றிப் பேசுகின்றன. அவைகள் இன்றைய நாட்களில் நமது இருதயங்களில் பதில் செயலை ஏற்படுத்தி, பல கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாட்டில் இதை மிக விருப்பமான புத்தகமாக ஆக்கியுள்ளன.



இப்புத்தகம் கவிதையாக எழுதப்பட்டுள்ளது (நவீன மொழி பெயர்ப்பைக் கவனிக்கவும்). யூதர்களின் கவிதை எதுகை மோனையுடன் அல்ல, ஆனால் சந்த இனிமையுடன் எழுதப்பட்டது. அவர்களின் கவிதை, இணைகருத்தியத்தைப் பயன்படுத்திற்று. ஒரு பொருள் இணைகருத்தியம் (ஒரே விஷயத்தை மாறுபட்ட வார்த்தைகளில் கூறும் இரு வரிகள்; **சங்கீதம் 19:1,2**ஐ கவனிக்கவும்) மற்றும் எதிர்ப்பொருள் இணைகருத்தியம் (முதல் வரி ஒரு சிந்தனையை வெளிப்படுத்த, அடுத்தவரி நாணயத்தின் மறு பக்கத்தை தரும் வகையிலானது; **சங்கீதம் 1:6**ஐக் கவனிக்கவும்) என்பவை இணை கருத்தியத்தின் மிகவும் பொதுவான வகைகளாய் இருந்தன.

இந்தப் புத்தகத்தை நாம் பொதுவாக, தாவீதின் சங்கீதங்கள் என்று நினைக்கின்றோம். தாவீது "இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடினவர்" என்று அறியப்பட்டிருந்தார் **(2 சாமுவேல் 23:1: லூக்கா 20:42ஐயும் காணவும்).** சங்கீதங்களுக்கு முன்பாக உள்ள குறிப்புகளின்படி, சங்கீதங்களில் குறைந்தது பாதியையாவது தாவீது எழுதியிருந்தாலும், மோசே, தாவீதின் பாடல் தலைவர்கள் மூவர் **(1 நாளாகமம் 15:16-20: 16:37-42),** மற்றும் சாலொமோன் உட்பட பல எழுத்தாளர்கள் இப்புத்தகத்திற்குப் பங்களித்துள்ளனர். செப்துவஜிந்த் வேதாகமம், சங்கீதம் 1 மற்றும் 119 ஆகியவற்றை எஸ்றா எழுதினார் என்று குறிப்பிடுகிறது. அனேகமாக இவர் கடைசித் தொகுப்பாளராய் இருந்திருக்கலாம்.

சங்கீதங்களுக்கு முன்புள்ள குறிப்புகள் எங்கே தோன்றின என்று நாம் அறிவதில்லை. ஆனால் அவைகள் செப்துவஜிந்த் வேதாகமத்திற்கு முற்பட்டவைகளாய் இருக்கின்றன. இவைகள் ஏவுதல் பெற்றவையல்ல என்றாலும், பொதுவாக உதவி

நிறைந்தவைகளாய் இருக்கின்றன. இக்குறிப்புகளில் பல, இசை இலக்குகளைக் குறிப்பிடுகின்றன; மறைவான அர்த்தம் கொண்டுள்ள சில வார்த்தைகள், அனேகமாக, நன்கு பழக்கப்பட்டிருந்த மெட்டுக்களின் பெயர்களாய் இருக்கலாம் (நல்ல பக்கக் குறிப்புகளும் அடிக்குறிப்புகளும் கொண்ட ஒரு வேதாகமத்தில் பரிசீலனை செய்யுங்கள்). சங்கீதங்களுக்குள்ளாகவே சில வேளைகளில் இசை இலக்குகள் காணப்படுகின்றன; உதாரணமாக, "சேலா," என்பது ஒரு சிறு இடைவேளையைக் குறிப்பிடலாம்.

## வரைகுறிப்பு

சங்கீதங்களின் புத்தகம் ஐந்து புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உங்கள் வேதாகமத்தில் இது சுட்டிக் காண்பிக்கப்படவில்லை என்றால், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கடைசிச் சில வசனங்களைப் பரிசீலனை செய்யுங்கள். ஒவ்வொரு புத்தகமும் ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக. ..." என்பது போன்ற வார்த்தைகளுடன் முடிகின்றன.

I. 1-41 (பிரதானமாக தாவீதின் சங்கீதங்கள்).

II. 42-72 (பிரதானமாக வரலாற்று சங்கீதங்கள்).

III. 73-89 (பிரதானமாக சடங்கு ரீதியான சங்கீதங்கள்).

IV. 90-106 (பிரதானமாக சிறையிருப்பிற்கு முற்பட்ட சங்கீதங்கள்).



V. 107-150 (பிரதானமாக, சிறையிருப்பின், மீளக்கட்டுவித்தலின் சங்கீதங்கள்).

சங்கீதங்களில் ஆர்வத்திற்குரிய பல பிரிவுகளும் வகைகளும் உள்ளன. முதல் சில எழுத்துக்களை கூட்டுவதால் சொல்லுண்டாக்கும் சித்திரகவி (சங்கீதம் 25, 34, 37, 111, 112, 145) போன்ற சங்கீதங்கள் உள்ளன; இந்த சங்கீதங்களில், முதல் வரியின் முதல் சொல்லானது எபிரெய அகர வரிசையின் முதல் எழுத்தைக் கொண்டிருக்கும்; பின்வரும் ஒவ்வொரு வரியும் அடுத்தடுத்த எழுத்துக்களைக் கொண்டும் தொடங்கும். சங்கீதங்கள் 90 முதல் 100 வரையில் உள்ளவை யூதர்களின் தொடக்கப் பாடல் புத்தகமாக இருந்திருக்கலாம். ஹல்லெல் (அல்லது "துதி") சங்கீதங்கள் (113-118, 136) பஸ்காவில் பயன்படுத்தப்பட்டன (இவைகள் கடைசி இராப்போஜனத்தில் இயேசு மற்றும் அவரது சீஷர்களால் பாடப்பட்டிருக்கலாம்). "ஆரோகண சங்கீதங்கள்" (120-134) எருசலேமுக்குச் செல்லும் திருப்பயணிகளால் பாடப்பட்டன. இப்புத்தகம் அல்லேலூயா சங்கீதங்களுடன் முடிவடைகிறது (146-150). "அல்லேலூயா" என்றால் "யெகோவாவைத் துதியுங்கள்" என்று அர்த்தமாகிறது.

சங்கீதங்கள் பெரும்பாலும் அவற்றின் வகைகளின்படி படிக்கப்படுகின்றன: ராஜரீக சங்கீதங்கள் (சங்கீதம் 2 போன்றவை), வரலாற்று ரீதியான சங்கீதங்கள் (66), படைப்பின் சங்கீதங்கள் (8), தேவனின் வசனத்தை மகிமைப்படுத்தும் சங்கீதங்கள் (119), மனம்வருந்தும் சங்கீதங்கள் (51), நன்றிசெலுத்துதலின் சங்கீதங்கள் (103), முதலியன. சங்கீதம் 58 போன்ற பழிதீர்த்தலின் சங்கீதங்கள் என்பது நமக்கு மிகவும் கடினமாமன வகைப் பாடலாக உள்ளது. இந்த சங்கீதங்களைப் பொறுத்த மட்டில், பின்வரும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் (1) சங்கீதங்களின் புத்தகம் பழைய ஏற்பாட்டில் உள்ளது (2) சங்கீதக்காரர், பழிதீர்த்தல் என்ற விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடுகின்றார்; அவர் சட்டத்தை தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்வதில்லை.

## சங்கீதங்களில் இருந்து பாடங்கள்

இன்றைய நாட்களில் ஆராதனைக்கான குறிப்பிட்ட

அறிவுறுத்தல்களுக்கு நாம் புதிய ஏற்பாட்டிற்குச் செல்ல வேண்டும் என்றாலும், சங்கீதங்களின் புத்தகமானது ஆராதனைக்குரிய ஆவியைப் பற்றி நமக்கு அதிகமாகப் போதிக்கிறது. உண்மையான ஆராதனை என்பது வெறும் சடங்காயிருப்பதில்லை; அது தேவனுடனான உறவின் அடிப்படையில் மற்றும் தேவனுடனான ஒரு வாழ்வின் அடிப்படையில் அமைந்துள்ளது. **(சங்கீதம் 84: யோவான் 4:23, 24** ஆகியவற்றை காணவும்).



சங்கீதங்களின் புத்தகத்தை தீர்க்கதரிசனம் என்பதற்கு மாறாக, கவிதை என்று நாம் வகைப்படுத்தி யிருந்தாலும், பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து அதிகமான குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் உள்ள 283 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களில், 116 சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

மேசியாத்துவக் குறிப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன **(லூக்கா 24:44**ஐக் கவனிக்கவும். சங்கீதங்களின் புத்தகமானது மற்ற விஷயங்களின் மத்தியில் இயேசுவின் குமாரத்துவம் (2:7), அவரது ஊழியம் (40:7, 8), அவரது வைராக்கியம் (69:9), அவர் புறக்கணிக்கப்படுதல் (118:22), மற்றும் அவர் காட்டிக் கொடுக்கப்படுதல் (41:9) ஆகியவற்றைப் பற்றி நமக்குக் கூறுகிறது. அவரது மரணம் சங்கீதம் 22ல் விவரிக்கப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் 34:20 மற்றும் 69:21 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளது. அவரது உயிர்த்தெழுதல் (16:8-10), பரத்துக்கேறுதல் (24:7-10; 68:18), மகிமையடைதல் (110:1), மற்றும் ஆளுகை (8:6) ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## பொதுவான செய்திகள் நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது உடல்நலத்திற்குக் கெடுதலா?

1. இந்த காலத்தில் எல்லோரும் நீண்ட நேரம் உட்கார்ந்தபடியே வேலை செய்யும் நிலையே உள்ளது.
2. தகவல் தொடர்பு வசதிகள், போக்குவரத்து, வேலை செய்யும் இடத்தின் சௌகரியங்கள், தொழில் நுட்பங்கள் போன்றவற்றால் உடல் உழைப்பு அவசியம் பெருமளவு குறைந்து விட்டது.
3. நீங்கள் உட்கார்ந்திருப்பது இதயம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், நீரிழிவு நோய்களுக்கும் காரணமாக இருக்கலாம் என உலகளவில் ஆராய்ச்சிகள் தெரிவித்துள்ளன.
4. நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதால், கால்களில் உள்ள இரத்தம் நாளங்களின் உட்சுவரின் செயல்பாடுகள் பாதிக்கக்கூடும். இதனால் கால்களில் உள்ள இரத்த நாளங்களில், இரத்தக் கட்டிகள் ஏற்படும் அபாயம் உள்ளது.
5. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அனைத்திலும், நீண்ட நேரம் உட்கார்ந்திருத்தலே குறைந்த வயதில் ஏற்படும் மரணங்களுக்கு 9% காரணமாக இருக்கிறது.

## பாடம் 1 பரிசுத்தத்தை காத்துக்கொண்ட தானியேல்

சிறுவர் பகுதி

கர்த்தருக்கு பிரியமான அன்பு குட்டிச் செல்லங்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். நீங்கள் எல்லோரும் நல்லாயிருக்கிங்களா? இப்பொழுது நாம் தானியேல் அண்ணன் எப்படி கர்த்தருக்கு பிரியமாக இருந்தார் என்பதை கற்றுக்கொள்ள போகிறோம்.



பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சர் எருசலேமுக்கு வந்து, யுத்தம் செய்து, அவர்களை ஜெயித்து, அங்கிருந்த பொருட்களையும் சில வாலிபர்களையும் பிடித்துக் கொண்டுப் போனார்; அவர்களில் தானியேலும் ஒருவர். தானியேலுக்கு ராஜா விருந்து கொடுத்தார். அதில் தேவன் சாப்பிடக்கூடாது என்று சொல்லபட்டவைகள் இருந்ததினால், தானியேல் அந்த உணவை சாப்பிடாமல் தவிர்த்தார். தேவனுக்கு பிரியமில்லாத உணவை உண்டு தன்னை கறைப்படுத்தாதபடி (குற்றவாளியாக்காதபடி) காத்துக்கொண்டார். மேலும் தொடர்ந்து தேவனுக்கு பிரியமான காரியங்களை மட்டும் செய்து வந்தார். அதினால் தானியயேலை அந்த நாட்டிலே மிகவும் பெரியவராக தேவன் உயர்த்தினார். அது மட்டுமா? மற்றவர்கள் பொறாமை கொண்டு தானியேலை அழிக்க முயற்சி செய்த போதும், தேவன் அற்புதமாக காப்பாற்றினார்.

செல்லங்களே! நீங்களும் தேவனுக்கு பிடிக்காததை செய்யாமல் இருங்கள். சண்டை போடுறது, திட்டுறது, அப்பா அம்மா வேலை சொன்னா அதை செய்ய காசு கேட்கிறது, மற்றவங்க பொருள் மேல ஆசைபடறது, எப்ப பார்த்தாலும் டிவி பார்க்கிறது என்று இல்லாமல், பைபிள் படிக்கிறது, ஜெபம் பன்றது, உண்மை பேசுறது, மன்னிக்கிறது, விட்டுக் கொடுக்கறது, சண்டே கிளாஸ் போகிறது என்று இருங்கள். அப்படி இருப்பது தான் பரிசுத்தம்! தானியலை உயர்த்தின தேவன், உங்களையும் உயர்த்துவார்.

**மனன வசனம்: 1 பேதுரு 1 :15**

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடவடிக்கைளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்".

**– S. அன்பு ஏசுதாஸ்.**

---

## பாடம் 2 பாவத்திற்கு எதிராக போராடிய யோபு

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! அக்கா இந்த முறை உங்களுக்கு யோபு என்ற ஒருவரை பற்றி சொல்ல போறேன். எல்லோரும் கவனமாக படிங்க. ஊத்ஸ் என்ற நாட்டிலே, யோபு என்ற ஒருவர் இருந்தார். அவர் மிகவும் தேவனுக்கு பயந்து, பாவமும் கெட்டதும் செய்யாமல், நல்லது மட்டும் செய்து வாழ்ந்தார். அவருக்கு ஏழு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். நிறைய ஆடு, மாடு, ஒட்டகம், கழுதை எல்லாம் இருந்தது. அவரிடம் நிறைய பேர் வேலைக்காரர்களாக வேலை பார்த்தனார். தேவனே பாராட்டும்படி ஒரு வாழ்க்கையை யோபு வாழந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.



இதனை பொறுக்காத சாத்தான், யோபுவினுடைய ஆடு, மாடு, ஒட்டகம், கழுதை எல்லாவற்றையும் அழித்து அவருடைய பத்து பிள்ளைகளையும் கொன்றான். அது மட்டுமா, யோபின் உடல் முழுவதும்

பயங்கரமான எரிச்சலும் அரிப்பமுள்ள வியாதியை கொடுத்து கொடுமைப்படுத்தினான். யோபு எப்படியாவது தேவனை தூஷித்து விடுவான் என காத்திருந்தான். அதோடு விடவில்லை, யோபின் மனைவியையும் அவன் நண்பர்களையும் வைத்து யோபுவை திட்டவும், குறை சொல்லவும், தூஷிக்கவும் வைத்தான். ஆனால் யோபு தன் வாயினால் எந்த ஒரு பாவமும் செய்யாமல், தேவனுக்கு நன்றி சொல்லி புகழ்ந்தார். அதனால் தேவன், யோபு இழந்த எல்லா சொத்துகளையும் இரண்டு மடங்காக கொடுத்து அவர் பிள்ளைகள் எல்லாரையும் உயிரோடு கொடுத்தார். அது மட்டுமா? யோபுவை குணமாக்கி, நீண்ட ஆயுள் கொடுத்தார். பார்த்தீங்களா குட்டீஸ்! நாமும் யோபுவைப் போல, என்ன வந்தாலும் நம்ம வாயினாலே திட்டுறது, புறம் பேசுவது, சபிப்பது, தூஷிப்பது, பொய் சொல்லுவது என கெட்டவைகளை பேசாமல், தேவனுக்கு பிடித்த நல்லவைகளையே பேசுவோம். தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார்!

**மனன வசனம்: எபேசியர் 4 : 29**

“கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

– பிரியா ஆண்டனி

பாடம் 3

# பாவத்தை வெறுக்கும் இயேசு

டியர் குட்டீஸ்! பரிசுத்த ஆண்டவர் இயேசுவின் பெயரில் என் வாழ்த்துக்கள்! ஆண்டவர் இயேசு நாம் எப்படிபட்ட வாழ்க்கையை வாழ வேண்டுமென்று விரும்புகிறார் என்று தெரிந்துக் கொள்வோம்.

இயேசுவானவர் இந்த பூமியிலே ஊழியம் செய்துக் கொண்டிருந்த காலத்தில், ஒருமுறை எருசலேமிற்கு வந்தபோது, அங்கே பெதஸ்தா என்ற குளத்திற்கு சென்றார். அந்த குளத்தை சுற்றிலும் கண் பார்வை இல்லாதவர்கள், சப்பாணிகள், வியாதியஸ்தர்கள் என நிறைய பேர் இருந்தனர்.



இயேசு அவ்விடத்தில் 38 வருடமாக திமிர்வாதம் என்னும் வியாதியினால் பாதிக்கப்பட்டு, படுக்கையிலே கிடந்த வியாதியஸ்தனை கண்டு, அவனை சுகமாக்க விரும்பினார். இயேசு அவனை நோக்கி “உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட'' என்று சொன்னார். உடனே அவன் சுகமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு சென்றான். அதற்கு பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு, “நீ சுகமானாய், அதிக கேடு உனக்கு வராதபடி இனி பாவஞ் செய்யாதே” என்றார்.

குட்டீஸ்! இயேசு அந்த அண்ணனிடம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழச்சொன்னார்? பாவம் செய்யாத பரிசுத்த வாழ்க்கை வாழச் சொன்னார். அதேப்போல் இன்றைக்கும் கூட நம்மிடமும் இயேசுவானவர், பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கை வாழச் சொன்னார். அதேப்போல் இன்றைக்கும் கூட நம்மிடமும் இயேசுவானவர், பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கையை தான் எதிர்பார்க்கிறார். ஆகையால் நாம் தேவன் எதிர்பார்க்கிற பரிசுத்த வாழ்வை வாழ்வோம்!

**மனன வசனம்: லேவியராகமம் 20 : 26**

“கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்”.

– குயினி பிரதீப்

பாடம் 4

# பாவியை வெறுக்காத இயேசு!

சிறுவர் பகுதி

அன்பு செல்லங்களே! ஆண்டவர் இயேசுவின் பெயரால் வாழ்த்துக்கள். நீங்கள் நன்றாக இருக்கவும், நல்லா படிக்கவும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.



ஆண்டவர் இயேசு, ஒரு நாள் காலை வேலையிலே தேவாலயத்திற்கு வந்தார். அப்பொழுது மக்கள் அனைவரும் அவரிடத்தில் வந்தனர். அவர் அவர்கள் அனைவருக்கும் போதனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது மிக மோசமான பாவம் செய்த ஒரு பெண்ணை, வேதபாரகரும் பரிசேயரும் அவள் பாவம் செய்துக் கொண்டிருக்கும் போதே பிடித்து, இயேசுவிடம் அவளைக் கொண்டு வந்தனர். பின்பு அவர்கள் இயேசுவை நோக்கி: போதகரே! இந்த பெண் பாவம் செய்தாள்; நாங்கள் கண்ணாரக் கண்டு பிடித்தோம்; இவளை ‘நியாயபிரமாணத்தின்படி கல்லெறிந்து கொல்ல வேண்டும்’ என்றனர். இயேசுவோ அமைதியாக தரையிலே குனிந்து எழுதிக்கொண்டிருந்தார். ஆனால் அவர்களோ ஓயாமல் கேட்டுக்கொண்டே இருந்தனர். இயேசுவோ, அவர்களை நோக்கி: உங்களின் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியட்டும். என்று சொல்லி, மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். அவர்களில் ஒருவரும் அந்த பெண் மேல் கல்லெறியாமல், அவ்விடத்தை விட்டு போய்விட்டனார். இயேசு நிமிர்ந்து, அந்தப் பெண்ணைப் பார்த்து: “நான் உன்னை தண்டிக்க விரும்பவில்லை, இனிமேல் பாவஞ்செய்யாமல் வாழு” என்று அனுப்பினர்.

குட்டீஸ்! தேவன் பாவத்தை வெறுக்கிறவர்; செய்த பாவத்திற்கு தண்டனை கொடுப்பவர்; ஆனாலும் பாவம் செய்த மனிதன் அழிந்துப் போக வேண்டும் என விரும்பாமல், அவன் தன் பாவத்தை உணர்ந்து, மன்னிப்பெற்று, திருந்தி வாழ வேண்டும் என விரும்புகிறார். ஆனால், இந்த மன்னிப்பை தொடர்ந்து பாவம் செய்ய பயன்படுத்தக்கூடாது. பைபிள் பாவம் என்று சொன்ன விஷயங்களை நீங்கள் செய்தால், உடனே மனந்திரும்பி, பாவத்தை விட்டு பரிசுத்தமாக வாழுவோம். அதுதான் தேவனுடைய விருப்பம்.

**மனன வசனம்: எசேக்கியேல் 18 : 23**

“துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்”.

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. டேஃப்னி – சென்னை
2. ஜூனித்தா – சென்னை
3. P.A. சுசித்ரா – சேலம்
4. R. ரோவினா – V.K. புரம்
5. M. வின்செண்ட் – கோவை
6. S. பாக்கியராஜம் – மதுரை
7. K. எல்ஸ்டன் – V.K. புரம்

### சென்ற மாதம் பெயர் விடுபட்டவகள்

1. Mrs. ரூபாவதி நோபிள் – திருநெல்வேலி
2. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
3. Mrs. பியூலா ரமேஷ் – வளர்நகர்

# அக்டோபர் மாத கேள்விகள்

1. "நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல" என ஜெபித்தது யார்?
2. நீங்களும் உங்கள் நடவடிக்கைகள் எல்லாவற்றிலேயும் எப்படி இருக்க வேண்டுமென, பேதுரு கூறுகிறார்?
3. மல்கியா, யூதா ஜனங்கள் எதை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள் என்று கூறினார்?
4. தேவன் நம்மை எதற்கென்று அழைத்ததாக, பவுல் தெசலோனிக்கேயருக்கு கூறுகிறார்?
5. பவுல், நாம் எதற்கு ஒத்தவேஷந்தரிக்ககூடாது என்கிறார்?
6. ''நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக" என சொன்னவர் யார்?
7. இயேசு நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டது ஏன்?
8. நாம் வேண்டிக்கொள்கிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம். ஏன்?
9. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு எதை அறிக்கையிட்டு, என்ன செய்ய வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார்?
10. எப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான தேவசமாதானம் நம் இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2016**

அனுப்ப வேண்டிய முவகரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## செப்டம்பர் மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. மாற்கு 16:16 | 2. அப் 2:38 | 3. மத் 28:19 |
| 4. மத் 3:15 | 5. மத் 3:11,13 | 6. வெளி 2:10 |
| 7. ரோம 6:4 | 8. அப் 22:16 | 9. எபே 4:5 |
| 10. மாற் 1:4, அப் 1:4 | | |

## அக்டோபர் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. ரூபவதி நோபிள் – நெல்லை
2. Mrs. பியூலா ரமேஷ் – வளர்நகர்
3. M. ஈஸ்வரி – கரூர்
4. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
5. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
6. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
7. R. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
8. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
9. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
10. சுதா சகாயம் – சென்னை
11. J. ஜான்ஸி – ஆனைமலை
12. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
13. R.சரோஜா – தென்கலம்
14. ச.பன்னீர்செல்வம் – சேலம்
15. D.குளோரி திலகவதி – ஈரோடு
16. S.பாக்கியராஜம் – மதுரை
17. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
18. S. சுந்திரமணி – திருப்பத்தூர்
19. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
20. Mrs. ஹெலன் திலக் – மதுரை
21. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
22. G.ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
23. J. விஜய் – வளர்நகர்
24. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
25. Mrs. ஒலிவ் தேவதாஸ் – சென்னை
26. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
27. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
28. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
29. S.அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
30. Mrs.மேரிராஜ் – மதுரை
31. A. தீமோத்தேயு – செட்டிபாளையம்
32. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
33. J. மாலதி ஜெயசெல்வம் – சீர்காழி
34. B. ஜாய்ஸ் ஜோசுவா – ஒட்டப்பிடாரம்
35. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
36. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
37. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
38. S. டெய்ஸி சாந்தகுமார் – நெல்லை
39. G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
40. S. சௌமியா – சிவகிரி
41. K. மௌனிகா தேவி – சிவகிரி
42. S. கீதாசரவணன் – சிவகிரி
43. N. ஞானசுந்தரி நாகராஜன் – பாளையங்கோட்டை
44. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
45. Mrs. கிளாடிஸ் ராஜையா – VKபுரம்
46. R. பால் ஜெயராஜ் – சென்னை
47. Mrs. மெர்சி சுதா – கோவை
48. S. சூசை மரியான் – சென்னை
49. Mrs. தெல்மா ஸ்டான்ஸி – மதுரை
50. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
51. V. ஜெனிபர் டக்லஸ் – சிவகிரி
52. K. சதீஸ் – சிவகிரி
53. K. பிரியா – சிவகிரி
54. N. பானுப்பிரியா – சிவகிரி
55. S. மேகி ஏஞ்சல் – சிவகிரி
56. C. பூபதி லாரன்ஸ் – கோவை
57. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
58. A. ரோஸ்மேரி – சென்னை
59. D. மோசஸ் – தஞ்சை
60. Mrs. சுமதி குணசேகரன் – கடலூர்
61. ராணி சாந்தகுமார் – மதுரை
62. ஜீவா செல்வராணி – திருச்சி
63. N. நந்தினி – ஈரோடு

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

மாதந்தோறும் பார்வையற்றோருக்காக சிறப்பு வேதாகம முகாம்கள் பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் டிசம்பர் மாதத்தில், குறைந்தது 60 ஏழை பார்வையற்ற குடும்பங்களுக்கு, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக புத்தாடைகளும், அரிசியும், சிறப்பு உணவும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டும் வழங்கப்பட உள்ளது.



பார்வையற்றோருக்கு புத்தாடைகள் வழங்கப்படுகிறது.





ஏழை பார்வையற்றோருக்கும், திக்கற்ற விதவைகளுக்கும் அரிசி வழங்கப்படுகிறது.






பார்வையற்றோருக்கான வேதாகம முகாம்





குன்னூரில் நடைபெற்ற சகோ. M.P. சாமி அவர்கள் நினைவுநாள் ஜெபக் கூட்டத்தில் நமது ஆசிரியர் ஆறுதல் செய்தியளித்தப்போது...

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th November 2016

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers